# வலயக் கல்வி அலுவலகம் - மூதூர்
# Zonal Education Office - Mutur

## இறுதிக் கணிப்பீடு – 2021 (2022)

தரம் : 10 | பாடம் : குடியியல் | நேரம் : 03 மணி

சுட்டெண் : | பாடசாலை :

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இல 1-40 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து கோடிடுக.**

1. தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் அனைவரும் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் ஆட்சி முறையை குறிப்பது,
   1. மறைமுக சனநாயகம் 2. நேரடி சனநாயகம்
   3. பிரதிநிதித்துவ சனநாயகம் 4. குழு முறை சனநாயகம்

2. சனநாயகத்தின் ஆரம்பம் என கருதத்தக்க ஆட்சி இடம் பெற்ற நகரம்..
   1. புது டில்லி 2. பர்ளின் நகரம் 3. எதேன்ஸ் நகரம் 4. நியூயோரக் நகரம்

3. “அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரும் பிரதிநிதி அரசாங்கமாகும்” எனக் கூறியவர்
   1.எட்காகேசி 2. சீலர் 3. ஆப்ரகாம் லிங்கன் 4. பேராசிரியர் காணர்

4. சட்டத்துறையின் மூலம் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்,
   1. நிறைவேற்றுத் துறை 2. நீதித்துறை
   3. சட்டத்துறை 4. குடிமக்கள்

5. பாராளுமன்ற ஆட்சி முறையில் நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படுவது,
   1. நிறைவேற்றுத் துறையிலிருந்து 2. பாராளுமன்றத்திலிருந்து
   3. மக்களிலிருந்து 4. நீதித்துறையிலிருந்து

6. சனநாயக நாடுகளில் ஆட்சி செயன்முறைகளின் போது மக்களின் கருத்துக்களை நேரடியாக அறியும் சந்தர்ப்பத்தை குறிப்பது,
   1. பாராளுமன்ற தேர்தல் என 2. சனாதிபதி தேர்தல் என
   3. மக்கள் தீர்ப்பு என 4. பாராளுமன்ற ஆட்சி முறை என

7. பினவரும் கூற்றுக்களில் ஆப்ரகாம் லிங்கனின் கூற்றைத் தெரவு செய்க.
   1. மக்கள் மக்களுக்காக மக்கள் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதே சிறந்தது.
   2. மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுகினற் மக்களுடைய ஆட்சிமுறை சனநாயக ஆட்சி முறையாகும்.
   3. சனநாயக ஆட்சிமுறை சகலருக்கும் உரிமைகள் வழங்கும் ஒரு ஆட்சி முறையாகும்.
   4. மனிதனின் கடமை மனிதனுக்கு சேவை செய்வது.

8. ஒழுங்கமைக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒன்றிணைந்த மக்கள் குழுவை நாம் அடையாளப்படுத்துவது,
   1. அரசியல் கட்சி என்பதாகும் 2. எதிரக் கட்சி என்பதாகும்
   3. அரசாங்கம் என்பதாகும் 4. அரசு என்பதாகும்

9. வடகொரியா என்ற நாடு
   1. சமதர்ம அரசியல் கோட்பாட்டை கொணட்து. 2. முதலாளித்துவ நாடாகும்.
   3. சனநாயகமுறை நாடாகும். 4. சர்வாதிகார நாடாகும்

10. இருகட்சி முறை நடைமுறையில் உள்ள நாடு,
   1. கியூபா 2. இந்தியா 3. பெரிய பிரித்தானியா 4. இலங்கை

11. இலங்கையில் அதிக எண்ணிக்கையான மாநகர சபைகளைக் கொண்ட மாவட்டம்.
1. மொனராகலை 2. கொழும்பு 3. வவுனியா 4. கம்பஹா

12. இறைமை என்ற எண்ணக்கருவிற்குள் உள்ளடக்கப்பட முடியாதது
1. அடிப்படை உரிமை 3. வாக்குரிமை
2. சுயாதீனமற்ற தீர்மானம் 4. ஆட்சி அதிகாரம்

13. உள்ளூராட்சி நிறுவனங்களில் அதிகமாக நகர சபைகளைக் கொணட் இரு நகரங்கள்
1. கொழும்பு – கணடி 2. கொழும்பு – களுத்துறை
3. கொழும்பு – கம்பஹா 4. களுத்துறை – கம்பஹா

14. ஒற்றையாட்சி நிலவும் நாடுகளுள் அடங்காத நாடு,
1. சுவிட்சர்லாந்து 2. ஐக்கிய இரச்சியம்
3. இலங்கை 4. பிரான்ஸ்

15. இன, மத, பால் வேறுபாடுகளின்றி இலங்கை வாழ் சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்ட அரசியல் யாப்பு,
1. குறூ மக்கலம் அரசியல் சீர்திருத்தம் 2. டொனமூர் அரசியல் சீர்த்திருத்தம்
3. சோல்பரி அரசியல் சீர்த்திருத்தம் 4. 1948 அரசியல் யாப்பு மூலம்

16. மோதல் ஒன்றினது சாதகமான விடயாமகக் கருதப்படுவது.
1. சொத்துக்கள் இழக்கப்படல் 2. உடமைகள் சேதமடைதல்
3. உயிர் அழிவுகள் 4. நீண்டகால பிரச்சினையின் தீர்வுக்கான நிகழ்வு

17. ஒற்றையாட்சி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியான கூற்று
1. நீதித்துறை அதிகாரங்கள் பிரதேச அலகுகளுக்கு வழங்கள்
2. பிராந்திய அரசு, நீதி என நீதி நடவடிக்கை பிரிந்து செயற்படல்
3. ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்
4. அரசியல் அதிகாரம் ஒரு மத்திய அதிகார பீடத்திடம் மையப்பட்டிருத்தல்.

18. பிரதேச செயலக மட்டத்தில் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நீதி அமைச்சினால் நிறுவப்பட்டுள்ள சட்ட ரீதியான நிறுவனம்,
1. பாராளுமன்றம் 2. பிரதேச சபை
3. இணக்க சபை 4. மனித உரிமை ஆணைக்குழு

19. **A** – தேசிய ரீதியில் நீதி மற்றும் சமாதானத்தை பாதுகாத்தல்
**B** – அரசாங்க வழக்குகளின் போது சட்ட ஆலோசனை வழங்குதல்
**C** – தேசிய விஷேட நிகழ்வுகளின் போது அரசாங்கத்திற்கு உதவுதல்
**D** – அரசியல் யாப்பு சம்மந்தமான விளகக் ம் கூறல்.

மேற்கூறப்பட்ட விடயங்களுள் சமூக பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்புப் படையினரால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளாவன,
1. **C** யும் **D** யும் 2. **A** யும் **D** யும்
3. **A** யும் **C** யும் 4. **C** யும் **B** யும்

20. சுவிற்சலாந்தின் சமஷ்டி மாநில அரசுகளின் எண்ணிக்கை,
1. 20 2. 06 3. 26 4. 246

21. நீதிபதி திணைக்களத்தின் பிரதான செயற்பாடு ஒன்று,
1. பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
2. அரசாங்கம் சார்பாக வழக்குத் தொடரல் மற்றும் வழக்குகளுக்கு ஆஜராகுதல்
3. நீதித்துறைக்குறிய சகல பொறுப்புக்களையும் செயற்படுத்தல்.
4. நீதி, நேர்மை கொண்ட ஒரு சமூகத்தை உருவாகக் ம் பொருட்டு செயற்படுத்தல்.

22. இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டளைச் சட்டம் பின்வருவனவற்றில் எது?

1. 1996 ஆம் ஆண்டின் 21ம் இலக்க கட்டளைச் சட்டம்
2. 2. 1998 ஆம் ஆண்டின் 50ம் இலக்க கட்டளைச் சட்டம்
3. 3. 1996 ஆம் ஆண்டின் 12ம் இலக்க கட்டளைச் சட்டம்
4. 1998 ஆம் ஆண்டின் 15ம் இலக்க கட்டளைச் சட்டம்

23. புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினால் மனிதனுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பானது,

1. சூழல் மாசடைதல் வேகமடைந்தமை.
2. வளங்களின் வீண்விரயம் குறைவடைதல்.
3. சமூகத் தொடர்புகள் வலுவடைதல்.
4. சிறந்த ஆளிடைத் தொடர்புகள்.

24. **A** - வளங்களின் வினைத்திறனை மேம்படுத்தல்

**B** - புதிய தொழிநுட்பத்தை அதிகம் பயன்படுத்தல்

**C** - புதிய கண்டு பிடிப்புகள் மீது கவனம் செலுத்தல்

**D** - சூழல் பாதுகாப்பினை மேற்கொள்ள முடியுமாதல்.

மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்களிலிருந்து நிலையான அபிவிருத்தியின் மூலம் கிடைக்கக்கூடியவை

1. **A** யும் **B** யும்      02. **C** யும் **A** யும்
2. **D** யும் **B** யும்      04. **A** யும் **D** யும்

25. நாடுகளுக்கிடையே நிலவும் மோதல் எவ்வாறு அழைக்கப்படும்,

1. உள்ளக மோதல்      2. சர்வதேச மோதல்
3. குடும்ப மோதல்      4. குழு மோதல்

26. விவசாய நடவடிக்கையில் அதிகளவு தொழிலாளர்களை ஈடுபடுத்துதல்,

1. முதலீட்டு நுட்பம்      2. உழைப்பு நுட்பம்
3. இயந்திர நுட்பம்      4. தகவல் நுட்பம்

27. **A** – ஆட்சி அதிகாரம்      **B** – அரசியல் யாப்பு ரதீ ியான
**C** – அடிப்படை உரிமைகள்      **D** – வாக்குரிமை

மேற்கூறியவற்றுள் உள்ளடங்காத விடயம்

1. **C**      2. **B**      3. **A**      4. **D**

28. பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் செயற்படுத்துகின்ற நிறுவனம்

1. பெற்றோலிய கூட்டுத்தாபனம்      2. கல்வி அமைப்பு
3. கமத்தொழில் திணைக்களம்      4. இலங்கை மதுவரித் திணைக்களம்

29. கிழக்கு மாகாணத்துக்குரிய மாவட்டம்

1. மட்டக்களப்பு      2. மன்னார்      3. வவுனியா      4. முல்லைத்தீவு

30. இலங்கையில் அதிக எண்ணிக்கையான பிரதேச சபைகளை கொண்ட மாகாணம் மற்றும் மாவட்டம்

1. தென் மாகாணம் - மாத்தறை மாவட்டம்
2. வட மத்திய மாகாணம் - அநுராத புரம்
3. வடமேல் மாகாணம் - குருநாகல் மாவட்டம்
4. வட மேல் மாகாணம் புத்தளம்

31. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய அரசுக்குரிய அதிகாரம் ஒன்று
1. தேசிய கல்வி
2. தேசிய பொருளாதார அபிவிருத்தி
3. வீடமைப்பு
4. உள்ளூராட்சி மன்றம் மற்றும் பெருந்தெருக்கள் அமைத்தல்

32. மாநில அரசுகள் ''கென்ரன்'' என்றழைக்கப்படும் நாடு
1. பிரான்ஸ் 2. ஐக்கிய இராஜ்ஜியம் 3. ஐக்கிய அமெரிக்கா 4. சுவிட்சர்லாந்து

33. பன்மைப் பண்பாட்டுத் தன்மையின் அடிப்படையில் வேற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி வெற்றி பெற்ற நாடுகளின் தொகுதி
1. சிங்கப்பூர், சுவிற்சலாந்து 2. அமெரிக்கா, இந்தியா
3. ஜப்பான், வடகொரியா 4. மாலைதீவு, பாகிஸ்தான்

34. வளங்கள் தேவையிலும் பார்க்க குறைவாகக் காணப்படும் நிலை,
1. அருமை 2. மிகை 3. பெருமை 4. வறுமை

35. நிலையான அபிவிருத்தியில் பிரசைகளின் கடமைகள்,
1. முறையற்ற கழிவகற்றல் 2. அபிலாசைகளை நிறைவேற்றல்
3. சட்டதிட்டங்களுக்கு அமைவற்று நடத்தல் 4. அபரிமிதமான நுகர்வைத் தவிர்த்தல்

36. ஒரு அரசுக்குரிய மூலக்கூறுகளாவன,
1. நிலப்பரப்பு, மக்கள் தொகை, நீதித்துறை, இறைமை.
2. அரசாங்கம், நீதித்துறை, நிறைவேற்றுத் துறை, யாப்பு
3. நிலப்பரப்பு, மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை.
4. மக்கள் தொகை, நீதித்துறை, இறைமை, அரசாங்கம்

37. இலங்கையில் சனாதிபதி அரசாங்க முறை ஆரம்பமான வருடம்.
1. 1972 2. 1978 3. 1948 4. 1977

38. சனாதிபதியால் கையெழுத்திடும் ஆணைப்பத்திரமொன்றின் மூலம் நியமிக்கப்படும் மாகாண சபை பதவி எது?
1. பிரதமர் பதவி 2. அமைச்சர் பதவீ 3. முதலமைச்சர் பதவி 4. ஆளுனர் பதவி

39.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. அரசாங்கம் | **A**. நியாயத்தை நிலை நிறுத்தல் |
| 2. சட்டத்துறை | **B**. சட்டங்களை நடைமுறைபடுத்தல் |
| 3. நிறைவேற்றுத்துறை | **C**. சட்டம் மற்றும் சமாதானம் பாதுகாத்தல் |
| 4. நீதித்துறை | **D**. சட்டம் உருவாகக் தல் |

மேற்கூறப்பட்ட ''அ'' பகுதிக்குறிய மிகப் பொருத்தமான மிகப்பொருத்தமான ''ஆ'' பகுதியை இணைகக் ம் போது கிடைப்பது
1. **CDBA** 2. **CBAC** 3. **CABD** 4. **CBDA**

40. 2012 குடிசன தொகை மதிப்பீடு தரங்களின் படி இலங்கை வாழ் இந்து சமயத்தவர்களின் சதவீதமாகக் காணப்படுவது,
1.9.7 2. 12.6 3. 12.9 4. 9.8

# வலயக் கல்வி அலுவலகம் - மூதூர்
# Zonal Education Office - Mutur

## இறுதிக் கணிப்பீடு – 2021 (2022)

தரம் : 10 | பாடம் : குடியியல் | நேரம் : 03 மணி

சுட்டெண் :

பாடசாலை :

## குடியியற்கல்வி - II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவிற்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**

01.

I. அதிகாரத்தின் இரண்டு வகைகளைத் தருக?

II. சமூகத்தில் மோதல் ஏற்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக?

III. சனநாயக நாட்டில் தேர்தல் தொகுதிகள் மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதனால் ஏற்படும் அனுகூலங்கள் இரண்டு தருக.

IV. சமஷ்டி அரசாங்கத்தில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டையும் எழுதுக.

V. சுவிட்சர்லாந்தின் பிராந்திய அலகுகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

VI. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் பண்புகள் இரண்டு தருக.

VII. இலவசப் பண்டத்திற்கு இரண்டு உதாரணம் தருக?

VIII. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் நன்மைக்காக பிரசை ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

IX. பொருளாதாரமொன்றின் பிரதான செயற்பாடுகள் இரண்டு தருக?

X. பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

02.

I. சனநாயகம் என்பதில் இடம்பெறும் "சன","நாயகம்" என்ற இரு பதங்களும் குறிக்கும் கருத்துக்களை முறையே எழுதுக.

II. தற்காலத்தில் நேரடி ஜனநாயகம் நிலவாமைக்கான காரணங்கள் மூன்றினைத் தருக?

III. சனநாயக நாடொன்றில் காணப்படும் கட்சி முறைகளின் வகைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

03.

I. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சந்தை இயல்பினை அதிகமாகக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு இரு உதாரணம் தருக?

II. சமதர்மப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக?

III. உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அவை பயன்படுத்துகின்ற விதத்திற்கேற்ப மூன்று பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம். அவை எவை? அப்பொருட்களுக்கு உதாரணம் தருக?

04.

I. (அ) சனநாயக நாட்டில் காணப்படும் அடிப்படைச் சட்டம் யாது?

(ஆ) அரசாங்கத்தின் முக்கிய துறைகள் மூன்றினதும் தொடர்பினை விளக்கும் ஆணவம் எது?

II. ஒரு நாட்டின் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படும் விடயங்கள் மூன்று தருக?

III. சனநாயக ஆட்சி முறை இடம்பெறும் நாட்டில் யாப்புக்கு இணங்கச் செயற்படுவதனால் கிடைக்கும் நன்மைகள் ஐந்து தருக?

05.

I. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்தும் அமைவிடம் தொடர்பான காரணிகள் மூன்று தருக?

II. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் மூன்று தருக?

III. “ இலங்கை ஓர் பன்மைப் பண்பாட்டுச் சமூகங் கொண்ட நாடாகும்” இக்கூற்றை விளக்குக?

06.

I. மோதலின் இரு பிரதான பிரிவுகளும் எவை?

II. மோதலின் வகைகளுக்கு மூன்று உதாரணம் தருக?

III. கலந்துரையாடலின் பண்புகள் ஐந்து தருக?

07.

I. சுவிற்சலாந்து, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் சமஷ்ட்டி ஆட்சி முறையில் பிரதேச அலகுகள் முறையே எவ்வாறு அழைக்கப்படும்?

II. சமஷ்டி அரசு வெற்றிபெறுவதற்கான காரணங்கள் காரணங்கள் மூன்று தருக?

III. சமஷ்டி அரசின் பண்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக?

**வலயக் கல்வி அலுவலகம் - மூதூர்**
**Zonal Education Office - Mutur**

**இறுதிக் கணிப்பீடு – 2021 (2022)**

**தரம் : 10** | **பாடம் : குடியியல்** | **நேரம் : 03 மணி**

**சுட்டெண் :** | **பாடசாலை :**

## விடைகள்

பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 01.2 | 11. 2 | 21. 2 | 31. 2 |
| 02. 3 | 12. 2 | 22. 1 | 32. 4 |
| 03. 4 | 13. 3 | 23. 1 | 33. 1 |
| 04. 1 | 14. 1 | 24. 4 | 34. 1 |
| 05. 2 | 15. 2 | 25. 2 | 35. 4 |
| 06. 3 | 16. 4 | 26. 2 | 36. 3 |
| 07. 2 | 17. 4 | 27. 2 | 37. 2 |
| 08. 1 | 18. 3 | 28. 1 | 38. 4 |
| 09. 1 | 19. 3 | 29. 1 | 39. 1 |
| 10. 3 | 20. 3 | 30. 3 | 40. 2 |

பகுதி – II

01.

I. அரசியல், சமூக, பொருளாதார

II. பல்வகைத் தோற்றப்பாடுகள், வேறுபட்ட கருத்துக்கள், இடையூறுகள், உளவியல் நிலமை

III. பிரதேச அபிவிருத்தி ஏற்படல், தேர்தல் தொகுதிகளுக்குப் பொறுப்புக்கூறக் கூடிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படல், மக்கள் தலைவரை பிரதேச ரீதியாக பயிற்றுவித்தல்

IV. மத்திய அரசு, மாநில அரசு

V. தேசிய பாதுகாப்பு, அதிக நிலப்பரப்பு, பொருளாதார அபிவிருத்தி, இன சமய மத வேறுபாட்டிற்கு தீர்வுகான வேண்டிய நிலை

VI. குறித்த காலத்தில் தேர்தல் நடைபெறல், சட்டதிட்டங்களுக்கு அமைய தேர்தல் நடைபெறல், சுமூகமான சூழலில் தேர்தல் நடைபெறல், சுதந்திரமாக தேர்தலில் ஈடுபடுவதற்கான உரிமை

VII. நீர், சூரிய ஒளி, காற்று

VIII. பிற சமயங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதிருத்தல், பிற கலாசாரங்களை மதித்தல், முரண்பாடுகள் ஏற்படாதவித்தில் செயற்படல், சமத்துவத்துடன் செயற்படல்

IX. உற்பத்தி, விநியோகம், விநியோகம், நுகர்வு

X. பெயரளவு – உண்மை நிருவாகம் என இரு பிரிவு காணப்படல், சட்டத்துறை மூலம் நிருவாகத்துறை தெரிவு செய்யப்படல், சட்டத்துறைக்கும் நிருவாகத் துறைக்கும் நேரடித் தொடர்பு, நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூறல், சட்டத்துறையால் நிறைவேற்றுத் துறை கட்டுப்படுத்தப்படல்

02. I. சன – மக்கள் , நாயகம் - தலைவர்

II. அதிக நிலப்பரப்பு, அதிக சனத்தொகை, சமூகத்தின் சிக்கல் வாய்ந்த தன்மை, அனைவரையும் ஒன்றுகூட்டுவதில் உள்ள சிக்கல்

III. ஒரு கட்சி, இரு கட்சி, பல கட்சி

03. I. சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்ஹொங்

II. உற்பத்திக் காரணிகள் அரசுடமையாக்கப்பட்டிருத்தல், மத்திய திட்டமிடல் சபை மூலம் நிருவகிக்கப்படல், சமூக நன்மையைக் கருத்திற்கொண்டு பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணல்

III. நுகர்வு (உணவு, ஆடையணிகள், மருந்துகள்)
இடைநிலை (உரம், வீட்டுத் தளபாடங்கள்)
மூலதனம் (இயந்திரங்கள், வாகனங்கள்)

04. I. அ) அரசியல் யாப்பு ஆ) அரசியல் யாப்பு

II. அரசின் மூன்று துறைகளின் கட்டமைப்பு, கடமை அதிகாரம், அடிப்படை உரிமை, யாப்புச் சீர்திருத்தம், அரசுக்கும் பிரஜைக்குமிடையிலான தொடர்பு

III. ஆட்சியின் சிறப்பான தன்மையைப் பாதுகாத்தல், மனித உரிமை தொடர்பாக அறிந்திருத்தல், அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படல், சட்டத்தின் பாதுகாப்பு சகலருக்கும் சமமாகக் கிடைத்தல்

05. I. புவியியல் அமைவிடம், இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்தியாவிற்கு அண்மையில், கிழக்கு – மேற்கு வர்த்தகப் பாதை

II. பல்வேறு இன மத மொழி பேசுகின்ற மக்கள் வாழ்தல், பழக்க வழக்கங்கள் மரபு பண்பாட்டு அடிப்படைகள் காணப்படல், ஒரே இனக்குழுவாக இருந்தாலும் பிரதேச வேறுபாடு காணப்படல், உலகம் கிராமமாக சுருங்குதல்

III. இலங்கையில் பல்வேறு இனங்களைச் சேர்ந்த சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள், பங்றகியர், மலாயர் போன்ற மக்களும் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற மக்களும் ஒன்றாக வாழ்கின்றனர்..........

06. I. உள்ளக மோதல், சர்வதேச மோதல்

II. தனியாள் மோதல், இரு தரப்பினருக்கிடையிலான மோதல், குழுக்களுக்கிடையிலான மோதல், நாட்டினுள் மோதல், நாடுகளுக்கிடையிலான மோதல்

III. தனிப்பட்டதாகவும் நம்பிக்கையுடையதாகவும் இருத்தல், உடனடி தீர்வு கிடைத்தல், இரு தரப்பினருக்கும் வெற்றி – வெற்றி எனும் தீர்வு கிடைத்தல், செலவு குறைந்த முறையாகக் காணப்படல்

07. I. சுவிட்ஸலாந்து – கென்ரன் , அமெரிக்கா – மாநிலம்

II. அரசியல் யாப்புக்கேற்ப செயற்படல், சகல இனங்களும் தேசிய உணர்வுடன் செயற்படல், நிதி வளங்களை நேர்மையாகப் பங்கிடல்,

III. எழுதப்பட்ட அரசியல் யாப்புக் காணப்படல், மத்திய மாநில அரசின் அதிகாரங்கள் யாப்பில் குறிப்பிடப்பட்டிருத்தல், யாப்புக்கு விளக்கமளிக்கும் பொறுப்பு உயர் நீதிமன்றுக்கு வழங்கப்பட்டிருத்தல், சட்டவாக்கத் துறையில் மேற்சபை காணப்படல், சமஷ்டி அரசுகளில் இலகுவில் மாற்ற முடியாத யாப்புக் காணப்படல்.